# வெளிவிவகாரச் செயலர் எம்.எம். அக்பர் அவர்களின் செனகலிற்கான விஜயம் (செப்டம்பர் 6-8, 2017)

**செப்டம்பர் 14, 2017**

பிரதம மந்திரி மோடியின் சிறப்புத் தூதுவராக செப்டம்பர் 6-8 செப்டம்பர் மாதத்தில் மத்திய அமைச்சர் எம்.ஜே. அக்பர் செனிகலிற்கு பயணித்தார்.

இந்த விஜயத்தின் போது, அவர் ஜனாதிபதி திரு. மேக்கி சால் அவகளை சந்தித்தார் மற்றும் 2017 நவம்பரில் நியூயார்க்கில் நடைபெறும் தேர்தல்களில் 2018-27 காலத்திற்கான சர்வதேச நீதிமன்றத்தில் இந்திய வேட்பாளர் நீதிபதி டாக்டர் தல்வீர் பண்டாரி மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவடற்காக செனகல் ஆதரவு குறித்து பிரதமர் திரு மோடி அவர்கள் அளித்த நன்றி கடிதத்தை வழங்கினார், இந்த கூட்டத்தில், செனகலின் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் திருமௌஹமெத் பௌன் அப்துல்லா டியொன் அவர்களும் உடன் இருந்தார். மத்திய அமைச்சர் மற்றும் ஜனாதிபதி மேக்கி சால் இருவரும் இந்தியா-செனகல் இருதரப்பு உறவுகளின் பல்வேறு அம்சங்களை விவாதித்தனர்.

நவம்பர் 2017 ல் ஆப்பிரிக்காவில் சமாதான மற்றும் பாதுகாப்புக்கான டக்கர் இன்டர்நேஷனல் கருத்துக்களத்திற்காக இந்தியாவின் பங்களிப்பாகமத்திய அமைச்சர் அவர்கள் செனகல் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் நாயகம் மேபா பாபா சிசேஸ் அவர்களுக்கு யூரோ 50,000 / - இனை வழங்கினார். இது கடந்த ஆண்டு ஆப்பிரிக்காவில் நடந்த சமாதான மற்றும் பாதுகாப்புக்கான டக்கர் இன்டர்நேஷனல் கருத்துக்களத்திற்கும் இந்தியா 50,000 யூரோ பங்களிப்பு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

செனிகலைஸ் அறிவுஜீவிகள், கல்வியாளர்கள்,செனகல் அங்கீகாரம் பெற்ற தூதர்கள், மற்றும் "ஆபிரிக்காவுடன் இந்தியாவின் ஒருங்கிணைப்புகள்" மீது செனகல் ஒரு சிந்தனை தொட்டி, மேற்கு ஆப்பிரிக்க ஆராய்ச்சி மையத்தில் (வார்க்), ஊடக நபர்களுடன் மத்திய அமைச்சர் பேச்சு நடத்தினார்.

வர்த்தகம், தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த தாகர் சேம்பரில் (CCIAD) செனகல் வர்த்தகர்களுக்கு "புதிய இந்தியாவின் மாற்றம்" என்கிற தலைப்பில் அமைச்சர் உறையாற்றினார்.

அமைச்சர் திரு அக்பர் அவர்கள் மறுமலர்ச்சி நினைவுச்சின்னத்தில் நடந்து கொண்டிருக்கும் காந்தி கண்காட்சிக்கு விஜயம் செய்ததுடன், அங்கு செனகல் காந்தியர்களுக்கு மகாத்மா காந்தி நினைவு பரிசுகளையும் அவர் வழங்கினார். கண்காட்சியில் விருந்தினர் புத்தகத்தில் அவர் கையெழுத்திட்டார்.

தம்மை கௌரவப்படுத்தும் விடத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வின் போது, அவர் செனகல் இந்திய சமூகத்திற்கு அவர் உரையாற்றினார்.

அவர் முக்கிய அடிமை வர்த்தக மையம் மற்றும் யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக உள்ள கோயீ தீவுக்கு வருகை தந்ததுடன், தீவில் உள்ள அடிமை இல்லம் (ஸ்லேவ் ஹவுஸ்) இல் பார்வையாளர்கள் புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

**புது தில்லி**

**செப்டம்பர் 14, 2017**